செ.வெ.எண்: 855/2016 நாள்: 02.12.2016

**தமிழ்நாடு அரசு நடத்திய மாநில அளவிலான சிலம்பாட்டம் போட்டியில் வெற்றி பெற்ற கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த மாணவ, மாணவியர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை இன்று (02.12.2016) நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில் பாரதியார் மற்றும் குடியரசு தின விளையாட்டு போட்டிகள் (2016-17) 6 முதல் 12-ம் வகுப்பு வரை, சேலத்தில் வைத்து நவம்பர் 29, 30 மற்றும் டிசம்பர் 1-ம் தேதி நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சிலம்பாட்ட போட்டிக்கு 23 மாணவர்கள், 23 மாணவியர்கள் கலந்து கொண்டனர். இதில் வெற்றிபெற்ற 11 மாணவ, மாணவியர்களுக்கு (ஒரு தங்கம் மற்றும் ரொக்கப்பரிசு ரூ.1,200/-, ஐந்து வெள்ளி மற்றும் ரொக்கப்பரிசு தலா ரூ.800/-, ஐந்து வெண்கலம் மற்றும் ரொக்கப்பரிசு தலா ரூ.600/-) பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் கிடைக்கபெற்றது.

இவர்கள் அனைவரும் இன்று (02.12.2016) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து பதக்கங்கள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நல அலுவலர் திரு. கில்பர்ட் பெஞ்சமின், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் திரு. திரவியராஜ், சிலம்பு பயிற்சியாளர்கள் திரு, ஜெயராஜ், திரு. ஸ்டாலின், திரு. சுபாஷ், திரு. ஜெயக்குமார் மற்றும் மாணவ, மாணவியர்களின் பள்ளி தலைமை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.